**Balu Saravana Sarma** *Prohithar – Astrologer*
**No9, 4th street, Kalyan Nagar, Tambaram West, Chennai 45, INDIA.**
**Ph: +91 44 2226 1742, Cell: +91 98403 69677**
**Email: prohithar@gmail.com Web: www.prohithar.com**

**⌘ Please Visit http://www.prohithar.com/mistakes.html for Typing and information Mistakes in this document ⌘**

# புரட்டாசி மாதம், விரோதி வருடம் சுப முகூர்த்த நாடகள் மற்றும் பண்டிகைகள்

# Auspicious Dates based on Drik-Vakya Panchangam, Purattaci - Virothi Varusham (2009 – 2010)

## புரட்டாசி மாத சிறப்புகள்:



குறிப்பாக இம்மாதத்தில் புலால் உண்ணாமல் விரதம் இருந்து பெருமாளுக்கு சனிக்கிழமைகளில் மாவிளக்கு (கும்ப தீபம்) ஏற்றி வழிபடுவார்கள். எவ்வளவு பெரிய பணக்காரராக இருந்தாலும், படிப்பாளியாக இருந்தாலும், ஊரின் பெரிய மணிதராக இருந்தாலும் புரட்டாசி மாதத்தில் நாரயண சேவையாக (வீடு வீடாக சென்று பிச்சை எடுத்து) கோவிந்தா ! கோவிந்தா என முழங்கி அரிசியை பெற்று அதை வீட்டில் பொங்கல் வைத்து வழிபட்டு உணவாக உண்பார்கள். இதனால் மணம் ஒரு சாதாரண ஏழையின் உள்ளம் போன்ற பக்குவமும் பணத்திமிரும் அடங்கி மணிதனாக வாழ்ந்து இறைவனை வணங்கும் மிக புனிதமான மாதம் ஆகும். இவ்வருடம் புரட்டாசி மாதத்தில் மாளைய அமாவாசை, நவராத்திரி, தீபாவளி என பண்டிகைகள் கொண்ட மிக சிறப்பான மாதம் ஆகும்.அதிக பண்டிகைகள் வருவதால் குடும்ப அங்கத்தினர்கள் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியுடன் இருக்கும் காலம் இது. இதனால் உறவுகள் பலப்படும் என்பதால் மிகவும் அன்பான மாதம் என்று கூறலாம்

புரட்டாசி மாதத்தில் 2 அமாவாசைகள் வருவதால் மல மாஸம் என்று சொல்வார்கள், ஆனால் சந்தர மாதப்படி இந்த புரட்டாசி (சந்திர மாதம் ஆஸ்வீஜம் ) திருமணத்திற்கு மிகவும் நல்லமாதம் ஆகும். தவிர்க மூடியாத சூழலில் செய்யும் திருமணம், கிரஹப்பிர வேசங்களுக்கு முன்னதாக அன்னதானம் செய்து பின்னர் வழிபாட்டை துவக்குவது நன்று

## புரட்டாசி மாத பிறப்பு:(நிராயண சூரியன் கன்னி இராசியில் பிரவேசிக்கும் காலம்) Purattaci month beginning

திருக்கணிதப்படி : ஆவணி 31 புதன் கிழமை (16.9.2009) இரவு 11:22 மணி அளவில் சூரியன் கன்னி ராசியில் பிரவேசிக்கிறார்

வாக்கியப்படி : ஆவணி 31 புதன் கிழமை (16.9.2009) மாலை 6:59 மணி அளவில் சூரியன் கன்னி ராசியில் பிரவேசிக்கிறார்

சூரிய அஸ்தமனத்திற்கு பின் மாதம் பிறப்பதால் மறுநாள் 17.9.2009 வியாழன் கிழமையே புரட்டாசி மாத முதல் தேதியாக கணக்கிடவேண்டும்.

**தெலுங்கு மாத பிறப்பு : Telugu month beginning** -19.9.2009 சனிக்கிழமை அன்று ஆஸ்வீன சுத்தம் ஆரம்பம் ஆகிறது அன்றுதான் நவராத்திரியும் ஆரம்பம் ஆகிறது

## புரட்டாசி மாத நல்ல நாட்கள் Purataci month Auspicious days

20.9.2009 ஞாயிறு முழுவதும்
கணபதி ஹோமம், திருமணம், வளைகாப்பு, நிச்சியம், மஞ்சள் நீராட்டுவிழா

21.9.2009 திங்கள் முழவதும்
கணபதி ஹோமம், திருமணம், வளைகாப்பு, நிச்சியம், மஞ்சள் நீராட்டுவிழா

22.9.2009 செவ்வாய் – அதிகாலை – சதுர்த்தி முன்னிட்டு
அதிகாலையில் சதுர்த்தி என்பதால் கணபதி ஹோமம் மிக நன்று

23.9.2009 புதன் மாலை மட்டும்
நிச்சியம், மஞ்சள் நீராட்டுவிழா

24.9.2009 வியாழன் மதியம் 1 மணி வரை
கணபதி ஹோமம், திருமணம், வளைகாப்பு, நிச்சியம், மஞ்சள் நீராட்டுவிழா

25.9.2009 வெள்ளி மாலை மட்டும்
நிச்சியம், மஞ்சள் நீராட்டுவிழா

28.9.2009 திங்கள் விஜயதசமி அதிகாலை

கணபதி ஹோமம் மிக நன்று

30.9.2009 புதன் அதிகாலை மட்டும்
கணபதி ஹோமம், ஏகாதசி முன்னிட்டு சுதர்ஸன ஹோமம் மிக நன்று

1.10.2009 வியாழன் அதிகாலை மட்டும்
கணபதி ஹோமம் மிக நன்று

2.10.2009 வெள்ளி அதிகாலை (சூரிய உதயத்திற்கு பின்னர் கரிநாள்)
அதிகலை கணபதி ஹோமம்,ருத்திர ஹோமம் மிக நன்று

3.10.2009 சனிக்கிழமை (3ஆம் பூரட்டாசி சனி மற்றும் பௌர்ணமி)
அதிகாலை சுதர்ஸன ஹோமம், மாலை சத்யநாராயணபூஜை செய்தல் நன்று

4.10.2009 ஞாயிறு நன் பகல் வரை(தெலுங்கு முறைப்படி)
நிச்சியம், மஞ்சள் நீராட்டுவிழா, காதனி விழா நன்று

5.10.2009 திங்கள் மதியம் 3 மணி மேல் நன்று
நிச்சியம், மஞ்சள் நீராட்டுவிழா

7.10.2009 புதன் மாலை (சங்கடஹர சதுர்த்தி)
மாலை கணபதி ஹோமம், சத்ரு சம்ஹரதிரிசதி வழிபாடு மிக நன்று

8.10.2009 வியாழன் அதிகாலை மட்டும்
கணபதி ஹோமம் (சதுர்த்தி முன்னிட்டு) மிக நன்று

9.10.2009 வெள்ளி அதிகாலை மற்றும் மாலை மட்டும்
அதிகாலை கணபதி ஹோமம் மிக நன்று, மாலையில் நிச்சியம், மஞ்சள் நீராட்டுவிழா

14.10.2009 புதன் அதிகாலை மட்டும்
சுதர்ஸன ஹோமம் நன்று (புதன் கிழமையும் ஏகாதசியும் சேர்ந்து வருவது மிகவும் சிறப்பானது)

16.10.2009 வெள்ளி அதிகாலை மட்டும்
அதிகலை கணபதி ஹோமம், ருத்திர ஹோமம் மிக நன்று

17.10.2009 சனிக்கிழமை (தீபாவளி )
லட்சுமி பூஜை செய்ய மிகவும் நல்ல நேரம் மாலை 6 மணி முதல் 7:30 மணி வரை
மாலை 6 மணி முதல் 7:30 மணி முன்னர் புது கணக்கு துவங்குதல் மிக நன்று
கேதார கௌரி விரதம் நல்ல நேரம்: மாலை 3-4:30

**புரட்டாசி மாத முகூர்த்த நாட்கள் (விரோதி வருடம்) Auspicious days Sep – Oct 2009 (Morning Time)**

| தேதி | ஆ.தேதி | கிழமை | பட்சம் | திதி | நட்சத்திரம் | யோகம் | லக்கினம் | காலை நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ✱ 04 | 20.09.2009 | ஞாயிறு | சுக்கில | துதியை | ஹஸ்தம் | அ | துலாம் | 07.30-09.00 |
| ✱ 05 | 21.09.2009 | திங்கள் | சுக்கில | திருதிய | சித்திரை | சி | கன்னி | 06.00-07.30 |
| 08 | 24.09.2009 | வியா | சுக்கில | ஷஷ்டி | அனுஷம் | சி | வ்ருச்சி | 10.00-11.30 |
| ✱ 28 | 14.10.2009 | புதன் | கிருஷ்ண | ஏகாதசி | மகம் | சி | துலாம் | 06.00-07.30 |
| 30 | 16.10.2009 | வெள் | கிருஷ்ண | த்ரயோ | உத்திரம் | சி | வ்ருச்சி | 08.30-10.00 |

✱ குறியிட்டவை திருக்கணித முறை முகூர்த்த நாட்கள் மற்றவை வாக்கிய முறை கணிப்பாகும்
இதில் தரப்பட்டுள்ள முகூர்த்த நாட்கள் பொதுவானவை, இது தங்களுக்கு பொருத்தமானவைதானா என் பதை ஜோதிடர் வசம் கலந்து ஆலோசனை செய்யவும். சந்திராஷ்டமம் அற்ற நாட்களை தேர்வு செய்யவும், 8ஆம்இட சுத்தி மிகவும் முக்கியமானது
Above given dates are generally auspicious dates, but it may be suitable or may not be suitable in the respect of your Horoscope. Please avoid on *Chandrastamam* (17th Star from your birth star) Star ruling day,

---

வாஸ்து **Vastu** (No Vastu dates in this month)
புரட்டாசி மாதத்தில் வாஸ்து நாள் இல்லை மேலும் புது இல்ல மணை பூஜைகள் இம்மாதத்தில் போடுவதில்லை

---

வாக்கியப்படி

- ✱ Amavasai அமாவாசை 18.9.2009, 17.10.2009
- ✱ Pournami பவுர்ணமி 3.10.2009
- ✱ Pradosham பிரதோஷம் 1.10.2009, 15.10.2009
- ✱ Ekadasi ஏகாதசி 30.9.2009, 14.10.2009
- ✱ Kritigai கிருத்திகை 7.10.2009, 8.10.2009(காலை12மணி வரை)
- ✱ Sankadahara Chathurthi சங்கடஹர சதுர்த்தி 8.10.2009
- ✱ Sasti சஷ்டி 24.9.2009, 9.10.2009, 18.10.2009 முதல் 24.10.2009 வரை கந்த சஷ்டி
  கோவில்களில் 23.10.2009 அன்று மாலை சூரசம்ஹாரம் நடைபெறும்
  ஜப்பான் , ஆஸ்திரேலியாவில் உள்ளவர்கள் 24.10.2009 அன்றைய தினத்தில் சஷ்டி விரதம் எடுத்துக்கொள்ளலாம்.

**கரிநாள்** புரட்டாசி16 (2.10.2009), 29 (15.10.2009)

**அமாவாசை:** 18.9.2009 அன்று வரும் ஆமாவாசையை கணக்கில் கொள்ளவேண்டும் கடைசியில் தீபாவளி அன்று வரும் அமாவாசை வழிபாடு கணக்கில் இல்லை, அமாவாசை தர்பணமும் இல்லை.(மாதப்பிறப்பு தர்பணம் உண்டு)

## பண்டிகைகள்: Festivals and Pooja time

**சரஸ்வதி பூஜை:** 27.9.2009 ஞாயிறு அன்று சரஸ்வதி பூஜை வழிபட நல்ல நேரம்: காலை 6 மணி முதல் 8 மணி வரை
Saraswathi Pooja : 6 am to 8 am on 27.9.2009

**விஜயதசமி:** 28.9.2009 திங்கள் அன்று ஆயுத பூஜை வழிபட நல்ல நேரம்: காலை 9-10:30 மாலை 6 மணி மேல் நன்று
Vijaya Dasami: 9am to 10:30 am and after 6pm on 28.9.2009

**வைஷ்ணவ வழிபாடு:** புரட்டாசி மாதம் வைஷ்ண வழிபாட்டின் மிக முக்கிய மாதம் ஆகும். இம்மாதத்தில் வரும் சனிக்கிழமைகளும், ஏகாதசியும் பகவான் விஷ்ணுவிற்கு மிகவும் உகந்த நாட்களாகும்.
மூன்றாவது சனிக்கிழமை 3.10.2009 மாலை பௌர்னமி அன்று சத்யாநாராயண வழிபாடு செய்வது மிகவும் சிறப்பானது
தீபாவளி அன்று லட்சுமி பூஜைக்கு மிகவும் உகந்த நாள் அன்றைய தினம் வட இந்தியா முழுவதும் தீபலட்சுமி வழிபாடு செய்வார்கள்

**தீபாவளி புனித நீராடல்:** தீபாவளி அன்று அதிகாலை 4:30 முதல் காலை 5:13 மணி முன்னர் நன்று பின்னர் யோகம் நன்றாக இல்லை
Deepawali bath time: 4:30 am to 5:13 am

**கேதார கௌரி விரதம் நல்ல நேரம்:** தீபாவளி அன்று மாலை 3-4:30

### தலை தீபாவளி நல்லநேரம்

**தாய்வீடு புறப்பாடு:**14.10.2009 புதன் அன்று நல்லது
**மாமியார் வீடு திரும்புதல்:** 18.10.2009 மற்றும் 22.10.2009 வியாழன் அன்று அதிகாலை மாமியார் வீடு புறப்படலாம்.
**புனித நீராடல் (கங்கா ஸ்நானம்)- புது துணி உடுத்தல்:** அதிகாலை 4:30 முதல் காலை 5:13 மணி வரை மிக நன்று

## தீபாவளி படையல்: Deepavali Padayal dates

தீபாவளி முன்னர் போடப்படும் முன்னோர்களுக்கான படையல் நாட்கள்: 11.10.2009, 12.10.2009. 14.10.2009
சிங்கப்பூர், மலேசியாவை சார்ந்தவர்களுக்கு மிகவிரவான மடல் பின்னர் வரும் (எனது இணையத்திலும் வெளியிடப்படும்)

---

⌘ Please Send Email to me (prohithar@gmail.com) if you find mistake(s) in this document and also your valuable comments ⌘


**இறைத்தொண்டில்**
**பாலு சரவண சர்மா**
*பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்*
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.
தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677
மின்னஞ்சல்: **prohithar@gmail.com** இணையம்: **www.prohithar.com**


© காப்புரிமை 17.9. 2009

**|| Contact time IST 13:30 to 20:30 ||**